Bishop's Circular

For Priests / Sisters

Bishop George Rajendran sdb

Diocese of Thuckalay

Bishop's House, P B No: 12, Thuckalay PO,

Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Ref. No. Priests/GR/95/2019**

19 June 2019

# ‘கல்வித்துறை பற்றிய சுற்றுமடல்’

***ஃசேசு மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!***

உலக அளவில் கல்விப் பணியில் முதன்மை இடத்தில் இருப்பது நமது கத்தோலிக்கத் திருச்சபை என்பதில் பெருமிதம் கொள்வோம். இப்பணி மூலம் இந்திய அளவில் மட்டும் ஏறத்தாழ அறுபதாயிரம் (60,000) கல்வி நிறுவனங்கள் வாயிலாக சாதி, மத வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் சேவை செய்து வருகிறது என்பது உலகறிந்த உண்மை. ஆனால் மத்திய அரசானது நமது கல்விப்பணிக்கு பல்வேறு நெருக்கடிகளை தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றது என்பது எதார்த்தம்.

1. தற்பொழுது கல்விப் பணியின் முழு கட்டுப்பாட்டையும் தன்னகத்தே கொண்டு வரும் நோக்கில் மத்திய அரசானது 484 பக்கங்களை கொண்ட 'தேசிய கல்வி கொள்கை 2019' வரைவை வெளியிட்டுள்ளது. வெளிதோற்றமாக பார்க்கும் பொழுது இவ்வரைவானது பிரச்சனைக்குரியதொன்றாக இல்லாதது போன்று தோன்றினாலும் ஆழமாக உற்று நோக்கின் இந்திய தேசத்தின் இறையாண்மையையும் பன்முகத் தன்மையையும் கேள்விக்கு உட்படுத்துவதாக உள்ளது. "நீ கடவுள்முன் ஏற்புடையோனாக நிற்க முழு முயற்சி செய்; உண்மையின் வார்த்தையை நேர்மையாய்ப் பகுத்துக் கூறும் பணியாளனாகிய நீ வெட்கமுற வேண்டியதில்லை" (II திமொத்தேயு 2 : 15) எனும் வார்த்தைகளுக்கேற்ப இறைவார்த்தையின் ஒளியில் இவ்வரைவை

பகுத்தாராயும் கடமை திருச்சபைக்கு உண்டு. இதற்கு நாம் இவ்வரைவை பற்றிய சரியான தெளிவைப் பெறுவது அவசியம். அங்ஙனம் இத்தேசியக் கல்வி கொள்கை பற்றிய நமது கருத்துக்களையும் எண்ணங்களையும் மனித வள மேம்பாட்டுத் துறைக்கு தெரிவிக்க வேண்டும். அதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு ஜூன் 30 வரை நிர்ணயித்துள்ளது. இக்கண்ணோட்டத்துடன், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோட்டார், குழித்துறை, தக்கலை மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்டங்கள் இணைந்து ஜூன் 22, சனிக்கிழமை அன்று கலந்தாய்வு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இக்கலந்தாய்வானது சுங்கான்கடை, புனித சவேரியார் கத்தோலிக்க பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெறுகிறது. அதன் நிறைவில் எழுத்து வடிவில் தயாரிக்கப்படும் பதில் மொழியை நமது கருத்தாக ஒவ்வொருவரும் கையொப்பமிட்டு தங்களது தனிப்பட்ட மின்னஞ்சல் வாயிலாக இந்திய மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரி: nep.edu@nic.com. மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய வசதியினை ஒவ்வொரு பங்குத் தந்தையரும், நிறுவனங்களின் தலைவர்களும் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஈசோ மிசிகாவில் அன்புடன்,

**✠ *மார் ஜார்ஜ் இராஜேந்திரன்* SDB**
*தக்கலை மறைமாவட்ட ஆயர்*

தக்கலை
19.06.2019